**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 26.11.2024 |
| Case No. | : **O.S.4/2019** | Nationality | : Indian |
| Name | : லோகநாதன் | Religion | : |
| Father's/Husband's Name | : சாரங்கபாணி | Age | : 55 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் 173/5 பி, மற்றும் 191/2 பி ஆகும். தாவா சொத்துக்கள் எனக்கு சொந்தமான சொத்துகள் இல்லை என்றால் சரிதான். எந்த அடிப்படையில் நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 19.04.2004 தேதியிட்ட கிரய சாசன ஒப்பந்தத்தின் அடிப்படையில் தாவா சொத்து எனது அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருவதில் பிரதிவாதிகள் எந்த வகையிலும் குறுக்கிடக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 16.05.1995 ம் தேதி ஏற்பட்ட கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றின் அடிப்படையில் தாவா சொத்து எனது அனுபவத்தில் இருந்து வருவதின் அடிப்படையிலும் மேற்படி பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. தாவா சொத்து எனது அனுபவத்தில் இருப்பதாக 16.05.1995 ம் தேதியிட்ட கிராம

நிர்வாக அலுவலர் அளித்த சான்றின் அடிப்படையில்தான் கூறுகிறேன் என்றால் மேற்படி சான்றின் அடிப்படையிலும் 1993 ம் ஆண்டிலிருந்தும் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறேன். 16.05.1995 ம் தேதியில் கிராம நிர்வாக அலுவலர் கொடுத்ததாக சொல்லியுள்ள சான்றை தவிர தாவா சொத்து எனது அனுபவத்தில் இருப்பதாக சொல்வதற்கு வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்ன ஆவணங்கள் என்று சொல்லமுடியுமா என்றால் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் ராஜேந்திரன் என்மீது கொடுத்த புகாரின் பேரில் காவல்துறையினர் விசாரணை செய்ததில் ராஜேந்திரனே சொத்து எனது அனுபவித்திலும் சுவாதீனத்திலும் இருப்பதாக ஒப்புக் கொண்டுள்ளார். அந்த ஆவணம் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ராஜேந்திரன் அவ்வாறு என்னிடம் ஒப்புக்கொண்டு கடிதம் எழுதிக் கொடுத்தாரா என்றால் நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவில் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.